நீதித்துறைப் படிவம் எண். 53 [விதி எண். 42–ஐ பார்க்க]

சாட்சியின் வாக்குமூலம்

**(குற்றவியல் நடைமுறைச்சட்டம் அத்தியாயம் XXII )**

நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண். 1, மேட்டூர்.

**STC. No. 733/2025**

**P.W. 1 –ன் வாக்குமூலம்**

**(புகார்தாரர் தரப்பு சாட்சி)**

.............

| | | |
|---|---|---|
| பெயர் | : | பிரசன்னா |
| தந்தை / கணவர் பெயர் | : | சவுந்தரம் |
| கிராமம் | : | மேட்டூர் அணை |
| வட்டம் | : | மேட்டூர் |
| மாவட்டம் | : | சேலம் |
| சாட்சி வரிசை எண் | : | **PW 1** |
| வயது | : | 41 |

*1969–ஆம் வருடத்திய உறுதிமொழிச்சட்டம் (1969–ஆம் வருடத்திய 44–வது மத்திய சட்டம் )–ன் வகையங்களுக்கு உட்பட்டு சத்தியபிரமாணத்தின் உறுதி செய்யப்பட்டு இன்று* ***19.01.2026–ஆம் தேதி*** *பதிவு செய்யப்பட்டது.*

**இரு தரப்பினர்கள் ஆஜர்/ கு.வி.மு.ச. பிரிவு 317–ன் / பாரத குடிமக்கள் பாதுகாப்புச்சட்டம் பிரிவு 355–ன் கீழ் மனுத்தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது**

**முதல் விசாரணை** (விசாரணை ஆரம்பிக்கப்பட்ட நேரம்:– 11.45 AM)

1. நான் இந்த வழக்கில் புகார்தாரர் ஆவேன். நான் எனது முதன்மை சாட்சியத்தை சத்தியபிரமாண வாக்குமூலம் மூலம் தாக்கல் செய்துள்ளேன். எனது சத்தியபிரமாண வாக்குமூலத்தில் கண்டுள்ள சங்கதிகள் அனைத்தும் என்னால்

சொல்லப்பட்டு எனது வழக்கறிஞரால் தயார் செய்யப்பட்டு, நான் அதனை சரிபார்த்து கையொப்பம் செய்து இந்த நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேன். மேற்படி சத்திய பிரமாண வாக்குமூலத்தில் சொல்லப்பட்டுள்ள சங்கதிகளை எனது சாட்சியமாக ஏற்றுக்கொள்ள கேட்டுக்கொள்கிறேன். (தாக்கல் செய்யப்பட்ட வாக்குமூலம் புகார்தாரர் தரப்பு சாட்சியமாக ஏற்றுக்கொள்ளப்பட்டது).

2. நான் எனது புகாருடன் கீழ்கண்ட ஆவணங்களை இணைத்து தாக்கல் செய்துள்ளேன். அவற்றை எனது தரப்பு சான்றாவணங்களாக குறியீடு செய்யுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

3. 09.04.2025–ம் தேதியிட்டு எதிரி வழங்கிய 456118 என்ற எண் கொண்ட காசோலையின் அசல் **பு.சா.ஆ.1** ஆக குறியீடு செய்யப்படுகிறது. 10.04.2025 ம் தேதியிட்ட காசோலை பணம் ஆகமால் திருப்பபட்ட வங்கியாளர் குறிப்பு **பு.சா.ஆ.2** ஆக குறியீடு செய்யப்படுகிறது. மேற்படி காசோலை திருப்பப்பட்டதன் அடிப்படையில் எனது வழக்கறிஞர் மூலமாக நான் அனுப்பிய 19.04.2025 ம் தேதியிட்ட சட்ட அறிவிப்பின் அலுவலக நகல் **பு.சா.ஆ.3** ஆக குறியீடு செய்யப்படுகிறது. 21.04.2025 மேற்படி சட்ட அறிவிப்பை எதிரி பெற்றுக்கொண்டதற்கான அஞ்சலக ஒப்புகை அட்டை வரிசை **பு.சா.ஆ.4** மற்றும் **பு.சா.ஆ.5 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** ஆகவே எதிரிக்கு தக்க தண்டனை வழங்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

**கற்றறிந்த எதிரி தரப்பு வழக்கறிஞரின் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணைக்காக வழக்கு ஒத்திவைக்கப்படுகிறது.**

விசாரணை முடிக்கப்பட்ட நேரம்:– 11.50 AM.

**மேற்படி சாட்சியம் என் முன்னிலையில் திறந்த நீதிமன்றத்தில் விசாரணை செய்யப்பட்டு, பதிவு செய்யப்பட்ட சாட்சியம் சாட்சிக்கு எடுத்துக்காட்டி அவர் சரி என ஒப்புக்கொண்டு திறந்த நீதிமன்றத்தில் கையொப்பம் செய்தார்.**

**ஒம்/–நா.கோபாலகிருஷ்ணன்**
**நீதித்துறை நடுவர் எண்.1,மேட்டூர்.**